**ஓய்வூதியச் சுற்றறிக்கை இல :01/2018**

எனது இல : ஓதி/ சுற்றறிக்கை/2018

ஓய்வூதியத் திணைக்களம்,

மாளிகாவத்தை,

கொழும்பு 10.

2018.06.20

வெளிநாட்டுத் தூதரகத் தலைவர்கள்,

மாவட்டச் செயலாளர்கள்,

பிரதேச செயலாளர்கள்.

**வெளிநாட்டில் வதியும் இலங்கை ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு**

தமது சொந்தத் தேவையின் பொருட்டோ அல்லது தொழில் நோக்கங்களிற்காகவோ வெளிநாட்டில் வதியும் இலங்கை ஓய்வூதியர்களுக்கான மாதாந்த ஓய்வூதியக்கொடுப்பனவை அதே ஓய்வூதியத் திகதியில் பெறுதற் பொருட்டும் திருத்தமான மற்றும் முறையான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயல்முறையை ஒழுங்குபடுத்தும் நோக்குடனும் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

**02.** கீழே பட்டியலிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கடிதங்கள் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவதுன் மூலம் இரத்துச் செய்யப்படும்.

- 1996.07.11 ஆம் திகதிய 03/1996 ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 1997.12.26 ஆம் திகதிய 03/1996 (1) ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 2007.01.22 ஆம் திகதிய 04/2007 ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 2010.04.06 ஆம் திகதிய 05/2009 (திருத்தம்) ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 2011.06.30 ஆம் திகதிய 05/2011 ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 2014.11.22 ஆம் திகதிய 15/2014 ஆம் இல. ஓய்வூதியச் சுற்றறிக்கை.
- 2016.08.02 ஆம் திகதிய 03/2016 ஆம் இல. அறிவுறுத்தல் கடிதம்.

**03.** வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் இங்கு வலியுறுத்திக் கூறப்படும் ஏற்பாடுகள் செல்லுபடியாகும்.

- ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு
- 1981 இன் ஆயுதப்படை ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை விதிக்கோவை
- 1981 இன் கடற்படை ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை விதிக்கோவை
- 1981 இன் வான்படை ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை விதிக்கோவை
- விதவைகள் மற்றும் அநாதைகள் கட்டளைச்சட்டம் / தபுதாரர் மற்றும் அநாதைகள் கட்டளைச்சட்டம் .

- ஆயுதப்படை விதவைகள் மற்றும் அநாதைகள் சட்டம்/ ஆயுதப்படை தபுதாரர் மற்றும் அநாதைகள் சட்டம்.

**04.** வெளிநாட்டு ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியக் கொடுப்பனவை சட்ட தத்துவ உரிமை வழங்கல் மூலமாகவோ அன்றி இன்னொருவரது கணக்கினூடாகவோ மாற்றிப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

**தமக்குரிய ஓய்வூதியத்தை வெளிநாட்டு ஓய்வூதியமாகப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள்.**

**05.** ஓய்வூதியத் திணைக்களத்தில் முதல் கொடுப்பனவு அலகிலிருந்து தமது ஓய்வூதியக் கொடுப்பனவை ஆரம்பித்த ஓய்வூதியர்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ஊடாக தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஓய்வூதியர்கள் ஆகியோரது ஓய்வூதியத்தை வெளிநாட்டு ஓய்வூதியமாகச் செலுத்தமுடியும். ஓய்வூதியரது பிரஜா உரிமை மற்றும் வெளிநாட்டில் வதிந்த காலம் ஆகியவை வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவு செய்கையில் கருத்தில் கொள்ளப்படும். அதன்படி கீழே குறிப்பிடப்படும் I,II மற்றும் III ஆகிய வகைக்குரிய ஓய்வூதியர்கள் வெளிநாட்டு ஓய்வூதியர்களாகக் கருதப்படுவர்.

I. **வேறுநாட்டுகளில் பிரஜா உரிமையுள்ள ஓய்வூதியர்கள்**
இலங்கையில் வாழ்ந்து, நீண்டகாலம் வெளிநாட்டில் வசித்திருப்பினும், காலத்திற்குக் காலம் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டில் வாழ்பவர்களது ஓய்வூதியம் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினூடாகச் செலுத்தப்படும்.

II. **இரட்டைப் பிரஜா உரிமையுள்ள ஓய்வூதியர்கள்**
இவர்கள் வெளிநாட்டில் வதியும் கால அளவைக் கருத்தில் கொள்ளாது இவர்களது ஓய்வூதியம் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினூடாகச் செலுத்தப்படும்.

III. **இரண்டு (02) வருடகாலத்திற்கு மேலதிகமாக வெளிநாட்டில் வதியும் இலங்கைஓய்வூதியர்கள்.**
இரண்டு (02) வருடகாலத்திற்கு மேலதிகமாக வெளிநாட்டில் வதியும் இலங்கை ஓய்வூதியர்கள் தற்போது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதேச செயலகத்திற்கு அறிவித்தல் வழங்குவதுடன் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினூடாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**06. I இரண்டு (02) வருடகாலத்திற்கு குறைவான காலப்பகுதியில் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்கள் மற்றும் ஆறு மாதங்கள் தொடக்கம் இரண்டு (02) வருட காலப்பகுதிவரை தமது சொந்தத் தேவை நிமித்தம் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்கள்.**

அ. இரண்டு (02) வருடகாலத்திற்கு குறைவான காலப்பகுதியில் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்கள் மற்றும் ஆறு மாதங்கள் தொடக்கம்இரண்டு (02) வருட காலப்பகுதிவரை தமது சொந்தத் தேவை நிமித்தம் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்கள் ஆகியோரின் வசதியைக் கருத்திற் கொண்டு அவர்கள் ஏற்கனவே ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதேச செயலகங்களினூடாக ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல்வேண்டும். அவ்விடத்தில் ஓய்வூதியரது செல்லுபடியாகும் கடவுச் சீட்டின் அத்தாட்சிப்படுத்திய புகைப்படப் பிரதி, அத்தாட்சிப்படுத்திய ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்புக் கடிதம், ஓய்வூதியரது வேண்டுகோள் கடிதம் மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான (3.5cm X4.5cm) வர்ணப் புகைப்படங்கள் இரண்டு ஆகியவை ஓய்வூதியரிடமிருந்து பிரதேச செயலாளர் பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஆ.இவ்வோய்வூதியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு மேறகொள்ளப்படும் போது புறப்பட்ட திகதியில் இருந்து வந்தடையும் திகதிவரை வாழ்கைச்செலவுப் படியாக ரூபா 2,000 உம் ஏனைய கொடுப்பனவாக ரூபா 3,500 உம் வழங்கப்படவேண்டும். இவ்வோய்வூதியர்கள் தொடர்பிலான விபரங்கள் அடங்கிய ஆவணம் ஒன்று பிரதேச செயலாளரால் பராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன் வருடாந்தம் யூன் 30 மற்றும் டிசெம்பர் 31 திகதிகளில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**II. ஆறு மாதங்கள் (06) அல்லது அதற்கும் குறைவான காலப்பகுதியில் தமது சொந்தத் தேவை நிமித்தம் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்கள்.**

இவ்வோய்வூதியர்கள் வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்களாகக் கருதப்படமாட்டார்கள். அதன்படி ஆறு மாதங்கள் (06) அல்லதுஅதற்கும் குறைவான காலப்பகுதியில் தமது சொந்தத் தேவைக்காகவோ, சுற்றுலா நோக்கிலோ, ஆன்மீக யாத்திரைக்காகவோ, அல்லது தனிப்பட்ட தேவைக்காகவோ வெளிநாட்டில் வதியும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் பிரதேச செயலகங்களினூடாக சாதாரண ஓய்வூதியக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்படல்வேண்டும்.

**07.** I. இல. 05(I,II,III) இல் கூறிப்பிடப்பட்ட ஓய்வூதியர்களது ஓய்வூதியத்தை ஆரம்பித்து பிரதான அலுவலகத்தில் இருந்து கொடுப்பனவுகளைமேற்கொள்ளல், தொடர்புடைய ஓய்வூதிய கோவையைபராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் ஆகிய பணிகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினூடாகமேற்கொள்ளப்படும்.

II.மேலே இல. 06(I,II) இல் விபரிக்கப்பட்ட, பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காகஉயர் ஸ்தானிகராலயங்களால் உறுதிப்படுத்தப்பட்டஉயிர்வாழ் சான்றிதழ்களை சேகரித்தல், தொடர்புடைய ஓய்வூதிய கோவைகளைப் பராமரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகளைமேற்கொள்ளல் ஆகிய பணிகள் அவ்வோய்வூதியருக்கான பிரதேச செயலகங்களினூடாக மேற்கொள்ளப்படும்

**வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுதற் பொருட்டு சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்.**

**08.** வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஓர் ஓய்வூதியர் அவர் வெளிநாட்டிற்குச் செல்வதற்கு இரண்டு மாதங்களிற்கு(2)முன்னதாக பின்வரும் ஆவணங்களைத் தனக்குரிய பிரதேச செயலகத்திலோ அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையிலோ சமர்ப்பிக்க வேண்டும்.

அ. முழுமையாக நிரப்பப்பட்ட சுயவிபரப் படிவம் (www.pensions.gov.lk இருந்து பதிவிறக்குக).

ஆ. அண்மையில் எடுக்கப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான (3.5cm X 4.5cm) வர்ணப் புகைப்படங்கள் இரண்டு (06 மாதங்களிற்கு இடையில்).

இ. வெளிநாட்டிற்குப் புறப்படுவதை சான்றுறுதிப்படுத்திய கடவுச்சீட்டு அல்லது நிரந்தர வதிவிட அத்தாட்சிப்பத்திரம் அல்லது குடியுரிமை அத்தாட்சிப்பத்திரம் அல்லது ஓய்வூதியர் தொழில் நோக்குடன் ஒப்பந்த அடிப்படையிலோ/ தற்காலிக அடிப்படையிலோ/ அமய அடிப்படையிலோ வெளிநாடு சென்றிருப்பின் சேவை ஒப்பந்தத்தின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்று ஓய்வூதியரால் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

ஈ. இலங்கை அரசால் வழங்கப்பட்ட ஓய்வூதியரது செல்லுபடியாகும் கடவுச் சீட்டின் அத்தாட்சிப்படுத்திய புகைப்படப் பிரதி.

உ. தொடர்புடைய வருடத்திற்கான உயிர்வாழ் சான்றிதழ்.

**09.** ஓய்வூதியர் மேற்படி “அ” தொடக்கம் “உ” வரையான ஆவணங்களை சமர்ப்பிக்கும் வகையில் தனக்குரிய பிரதேச செயலகத்திற்கோ அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்கோ நேரடியாக சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் ஓய்வூதியர் வசிக்கும் நாட்டின் இலங்கை தூதரக அங்கீகாரம் பெற்ற அலுவலர்களாலோ/ உயர் ஸ்தானிகராலயத்தாலோ/ வெளிநாட்டு தூதுக் குழுக்களாலோ அத்தாட்சிப்படத்தப்பட்ட மேற்கூறப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆவணங்கள் வேறு அலுவலர்களால் அல்லது நபரால் / நிறுவனத்தால் அத்தாட்சிப்படுத்தப்படிருப்பின் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

10. சமர்ப்பிக்கப்படும் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அல்லது ஓய்வூதியத் திணைக்களத்திற் கடமையாற்றும் அலுவலர்களால் சரிபார்க்கப்படுவதுடன் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அக்கணமே நிராகரிக்கப்படும். முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுக்கு வெளிநாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான தேவையான எதிர்கால நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும்.

**வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கான வெளிநாட்டு ஓய்வூதியத்தை ஆரம்பித்தல்**

11. வெளிநாட்டில் குடியுரிமை பெற்ற அல்லது இரட்டைக் குடியுரிமையுள்ள அல்லது இரண்டு (02) வருடங்களிற்கு மேல் வெளிநாட்டில் வதியும் இலங்கை ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விசேட வங்கிக் கிளைகளினூடாகவே செலுத்தப்படும்.

| | |
|---|---|
| அ. இலங்கை வங்கி | – நகரக் கிளை (Metropolitan Branch ) |
| ஆ. மக்கள் வங்கி | – ராாணியின்கிளை (Queens' Branch) |
| இ. பான் ஏசிய வங்கி | – பொரளை கிளை |
| ஈ. ஹட்டன் நஷனல் வங்கி | – மாளிகாவத்தைக் கிளை |

12. ஓய்வூதியர் மேற்கூறப்பட்ட வங்கிக் கிளைகளில் ஒன்றில் **தனியான சேமிப்பு வங்கிக் கணக்கொன்றை** திறத்தல் வேண்டும், ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையினால் அனுமதி வழங்கப்பட்ட பின்னர் வங்கியால் வழங்கப்படும் மாதிரிப் படிவம் (www.pensions.gov.lk இணையத்தள முகவரியில் பதிவிறக்கல்) , ஒப்புதல் கடிதம் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட கெ.வை.சி (know your customer) ஆவணம் ஆகியவை (09 அம் பந்தியில் குறித்தவாறு சான்றுறுதிப்படுத்தல்)தொடர்புடைய வங்கிக்குச் சமர்ப்பித்தல்வேண்டும்.

13. ஓய்வூதியர் வசதிக்கேற்ப ஓய்வூதியத்தை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது

- சம்பந்தப்பட்ட விசேட வங்கிக் கணக்கிலிருந்து அதேவங்கியின்வேறுகிளையில் ஓய்வூதியரதுஅதே பெயரில் பராமரிக்கப்படும் தனி நபர் சேமிப்புக் கணக்கிற்கு
  **அல்லது**
- வெளிநாட்டு வங்கியில் ஓய்வூதியரது பெயரில் பராமரிக்கப்படும் தனிநபர் சேமிப்புக் கணக்கிற்கு

இடமாற்றம் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மேற்கூறப்பட்டவாறு மாற்றும் போது சம்பந்தப்பட்ட நாட்டின் நாணயப்பெறுமதி மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற வீதம்

ஆகியவற்றை ஓய்வூதியர் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாணயப் பரிமாற்றத்திற்கும் நாணயப்பரிமாற்றச் சிட்டையுடன் உயிர்வாழ் சான்றிதழையும் அவ்வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. வங்கிக் கணக்குகளிடையே நாணயப் பரிமாற்றத்தை எதிர்பார்க்கும் ஓய்வூதியர் தனது கோரிக்கையை நேரடியாக தொடர்புடைய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வங்கியானது ஓய்வூதியரின் அடையாளத்தை ஓய்வூதியத் திணைக்கள இணையமுகவரியை அணுகி ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வோய்வூதியரது அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் எவையேனும் பிரச்சினைகள் காணப்படின் வங்கியானது ஓய்வூதியத் திணைக்களத்திடம் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15. வேலைவாய்ப்பு நோக்கங்களிற்காக இரண்டு வருடங்களிலும் குறைந்த காலப்பகுதிக்கு வெளிநாடுசெல்லும் ஓய்வூதியர்கள் பிரதேச செயலகங்களில் இருந்து ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். வணிக வங்கியின் எந்தவொரு கிளையிலும் திறக்கப்பட்ட தனிநபர் சேமிப்பு கணக்கினூடக ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கைமேற்கொள்ளப்படுவதுடன் **மேற்கூறப்பட்ட கணக்கிற்கு ஏ.ரி.எம் (ATM) அட்டை பாவித்தல் தடை செய்யப்படும்.**

16. வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்களூடாக ஓய்வூதியம் வழங்கப்படுவதும் எதிர்காலத்தில் மட்டுப்படுத்தப்படும். அதன்படி புதிதாக ஆரம்பிக்கப்படும் வெளிநாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகள், ஓய்வூதியரது வசதிக்கேற்ப வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையின் வழிகாட்டலுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் வங்கிக் கணக்குகளினூடாக வழங்கப்படும்.

17. ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயங்களினூடாக **ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வரும் வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கு மாத்திரம்மாதாந்த ஓய்வூதியம் உயர்ஸ்தானிகராலயங்களினூடாக தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்**.

18. இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாடுகளிற்கேற்றவாறு பொருத்தமான வணிக வங்கியானது வெளிநாட்டு ஓய்வூதியருக்கான வங்கிக் கணக்கு தொடர்பில் அவ்வங்கிக் கணக்கை திறப்பது அடங்கலாக பராமரித்தல், மற்றும் நாணயப் பரிமாற்றம் ஆகியவை தொடர்பிலான அனைத்து நிர்வாக அலுவல்களையும் மேற்கொள்ளும்.

**சேகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்தல்**

19. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளிநாடுகளிற்கு சென்ற ஓய்வூதியர்களுக்கு அவர்கள் வருகை தந்ததன் பிற்பாடு சேகரிக்கப்பட்ட ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட்டது. ஆனால் 2009 ஆம் ஆண்டு வெளிநாட்டு ஓய்வூதியக் கிளை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதே ஓய்வூதியத் திகதியிலேயே வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியம் பெறும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. ஆகையால் தற்போது நிலுவை ஓய்வூதியம் வழங்கப்படும் தேவை குறைவடைந்துள்ளது. இருப்பினும்

- 2009 க்கு முன் ஓய்வூதியம் பெறாதோரது ஓய்வூதியக் கொடுப்பனவு.
- முறையான ஓய்வூதிக் கோவையற்ற ஓய்வூதியர்கள்
- பதிவேடுகள் அழிவடைந்த/ பதிவேடுகள் அற்ற ஓய்வூதியர்கள்
- தற்காலிக ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் ஓய்வூதியர்கள்.

ஆகியோர் சேகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள்கின்றனர். இவ்விடயங்ளைக் கருத்தில்கொண்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஓய்வூதியர் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அ. குறிப்பிட்ட காலப்பகுதிக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்பது தொடர்பில் பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல்.

ஆ.குறிப்பிட்ட ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்ற சத்தியக்கடிதம்.

இ. உயிர் வாழ் சான்றிதழ்

**20. அதற்கு மேலதிகமாக**

அ. முறையாக தயாரிக்கப்பட்ட ஓய்வூதிய கோப்பு

ஆ.ஓய்வூதியத் திணைக்களத் தரவுத் தளத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்யப்படவில்லை எனும் அறிவித்தல் வழங்கப்பட்டிருத்தல்

ஆகியவை பூரணப்படுத்தப்படுகையில் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்க எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற் கூறப்பட்ட பூரணப்படுத்தப்படாதஆவணங்களுடனான ஓய்வூதியரது வேண்டுகோள் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன் எதிர்கால மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்.

**உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தல்**

21. அனைத்து வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியர்களும் ஒவ்வொரு வருடமும் தமது உயிர் வாழ்சான்றிதழை டிசெம்பர் 1 ஆம் திகதியில் இருந்து அடுத்து வரும் வருடம் மார்ச் 31 ஆம் திகதிக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். வெளிநாட்டில் நிரந்தரமாக வதியும் அல்லது இரட்டைப் பிரஜா உரிமையுள்ள அல்லது மூன்று வருடங்களிற்கு மேலாக வெளிநாட்டில் வதியும்,பிரதான

அலுவலகத்தால் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்யப்படும் ஓய்வூதியர்கள் தங்களது உயிர் வாழ் சான்றிதழை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வருகை தந்து அங்குள்ள முன்னிலைச் செயல் சாளரத்திலோ அல்லது தாம் வதியும் நாட்டின் வெளிநாட்டு தூதரக தலைமை அதிகாரியினூடாகவோ தலைமைச் செயலகத்திற்கு சமர்ப்பிக்க முடியும்.

**22.** பிரதேச செயலகங்களினூடாக ஓய்வூதியம் பெறும், சேவை நோக்குடன் வெளிநாட்டிற்குச் சென்றுள்ள ஓய்வூதியர்கள் தங்களது உயிர் வாழ் சான்றிதழை தாம் வதியும் நாட்டின் வெளிநாட்டு தூதரக தலைமை அதிகாரியினூடாக பிரதேச செயலகங்களிற்குச் சமர்ப்பிக்கமுடியும்.

**23.** சேவை நோக்குடன் (06) மாதங்களோ அல்லது அதைவிடக் குறைந்த காலமோ வெளிநாடுகளில் வதியும் ஓய்வூதியர்கள் வெளிநாட்டு ஓய்வூதியர்களாகக் கருதப்படமாட்டார்கள். அவர்கள் தமது உயிர் வாழ் சான்றிதழை வழமையான முறையில் கிராம சேவகரூடாக பிரதேச செயலகங்களிற்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

**24.** பலவீனமான நிலையில் அல்லது சுகயீனமுற்ற நிலையில் தூதரகங்களிற்கு செல்ல முடியாத ஓய்வூதியர்கள் தொடர்புடைய நாட்டின் அனுமதிபெற்ற வைத்திய அதிகாரியிடம் சான்றிதழை பெற்று தூதரகத்தின் அத்தாட்சியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். தூதரகத்தால் அத்தாட்சிப்படுத்தப்படாத உயிர் வாழ் சான்றிதழ் நிராகரிக்கப்படும்.

**25. வெளிநாட்டு ஓய்வூதியர்கள் தங்களது உயிர் வாழ் சான்றிதழை முழுமையாகப் பூரணப்படுத்தி அத்தாட்சிப்படுத்தி நேரடியாக வருகை தருவதனூடாகவோ அல்லது தாம் வதியும் நாட்டின் வெளிநாட்டு தூதரக தலைமை அதிகாரியினூடாகவோ ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் உறவினர்கள், பிரதி நிதிகள் அல்லது சட்ட வல்லுனர்களூடாக தமக்கான உயிர் வாழ் சான்றிதழைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான அங்கீகாரம் இச்சுற்றறிக்கை செயலுக்கு வருவதன் மூலம் இரத்துச் செய்யப்படுகிறது.**

**26.** தொடர்புடைய வருடங்களிற்கான உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தலுக்கான அறிவுறுத்தல்கள் ஓய்வூதியத் திணைக்கள இணையத்தளத்தில் அவ்வவ் வருடங்கள் இற்றைப்படுத்தப்படும்.

**27.** வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்களினூடாக சமர்ப்பிக்கப்படும் உயிர்வாழ் சான்றிதழ்கள் வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்களாலும் ஓய்வூதியத் திணைக்களத்தினூடாக சமர்ப்பிக்கப்படும் உயிர்வாழ் சான்றிதழ்கள் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையாலும் தரவுத் தளத் தொகுதியில் பதிவிடப்படும்.

**28.** வெளிநாட்டு ஓய்வூதியர்களது உயிர்வாழ் சான்றிதழை சான்றுறுதிப்படுத்தி அத்தாட்சிப்படுத்தும் அதிகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளது.

அ). ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.
ஆ). வெளிநாட்டு தூதுக் குழுத் தலைவர்.
இ). ஓய்வூதியப் பணிப்பாளர்.
ஈ). ஓய்வூதிய உதவிப் பணிப்பாளர்
உ). பிரிவுத் தலைவர் ( வெளிநாட்டு ஓய்வூதியம்)

அத்தாட்சிப்படுத்துகையில் அத்தாட்சிப்படுத்துபவரது அலுவலக முத்திரையுடன் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரி ஆகியவை கட்டாயமாக பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத சான்றிதழ்கள் நிராகரிக்கப்படும். மேலே பட்டியலிடப்பட்டுள்ள சான்றுறுதிப்படுத்தும் அதிகாரம் உள்ள அலுவலர்கள் தவிர்ந்தோரல் சான்றுறுதிப்படுத்தப் பட்டிருப்பின் அச்சான்றிதழ்களும் நிராகரிக்கப்படும். (இக்காரணிகள் 09அம் இலக்க வாசகத்தின் அங்கீகாரத்திற்கு மேலும் செல்லுபடியாகும்.)

**29.** உயிர் வாழ்ச்சான்றிதழ் நிராகரிக்கப்பட்ட ஓய்வூதியர்களது பட்டியல், தொடர்புடைய வருடத்தின் ஏப்பிரல் 1 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை ஓய்வூதிய திணைக்கள இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உயிர் வாழ் சான்றிதழ்களை மீளச் சமர்ப்பிப்பதற்கான நிவாரண காலமாக ஏப்பிரல் 1 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை வழங்கப்படுகிறது. மார்ச் 31 ஆம் திகதியில் உயிர் வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத ஓய்வூதியர்கள் மற்றும்ஏப்பிரல் 30 ஆம் திகதியில்தவறாகப் பூரணப்படுத்தப்பட்ட உயிர் வாழ் சான்றிதழிற்குப் பதிலாக திருத்தமான உயிர் வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்கள் ஆகியோரது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அவ்வருடத்தின் மே மாதத்தில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்.

**30.** மே மாதத்தில் நிறுத்தப்பட்டதன் பின்னர் ஒரு ஓய்வூதியர் உயிர் வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தால்ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெற்றபின்னரே கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.அவ்வாறு உயிர் வாழ்ச் சான்றிதழ் சமர்ப்பிக்காது நிறுத்திவைக்கப்பட்ட ஓய்வூதியங்கள் திரட்டிய ஓய்வூதியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.மேற்தரப்பட்ட பந்தியிற் (19) குறிப்பிட்டதற்கமைய குறித்த ஓய்வூதியர் திரட்டிய ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**31. உயிர் வாழ்ச்சான்றிதழ் சமர்ப்பிக்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட தூதரகம்/ உயர் ஸ்தானிகராலயத்தூடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் தொடர்பில்,மேற்கூறப்பட்ட பந்தி (11) இன் பிரகாரம் வங்கிக் கணக்கு திறந்ததன் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவு செயற்படுத்தப்பட்டு தொடர்புடைய வங்கியின் வங்கிக் கணக்கினூடாக மாத்திரம் ஓய்வூதியக் கொடுப்பனவு மேலும் வழங்கப்பட வேண்டும்.**

32. நாணயப்பரிமாற்றம் அடங்கலாக வங்கி விவகாரங்களிற்காக மேற்கூறப்பட்ட பந்தி(26)இற்கேற்ப உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

33. இச்சுற்றறிக்கை 2018.03.31 ஆம் திகதியில் இருந்து வலுவிற்குவரும்.

34. ஓய்வூதியச் செலவு முகாமையில் தங்களது ஒத்துழைப்பு மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

35. பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும்சட்டமும் ஒழுங்கும்பற்றிய அமைச்சுச் செயலாளரின் ஒப்புதலுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்:**

| | |
|---|---|
| 1. ஜனாதிபதி செயலாளர் | – த.த.த |
| 2. பிரதமரின் செயலாளர் | – த.த.த |
| 3. அமைச்சரவைச் செயலாளர் | – த.த.த |
| 4. வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் | –த.த.த & பொ.ந.மே |
| 5. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் | – த.த.த |
| 6. பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும்சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சுச் செயலாளர் | – த.த.த |
| 7. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் | – த.த.த |
| 8. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் | – த.த.த |
| 9. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | - த.த.த & பொ.ந.மே |
| 10. கணக்காய்வாளர் நாயகம் | – த.த.த |
| 11. பொது முகாமையாளர் , வர்த்தக வங்கி | -த.த.த & பொ.ந.மே & அனைத்துக் கிளைகளுக்கும் அறிவுறுத்தற் பொருட்டு. |